# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,286 — 1961 පෙබරවාරි 10 වැනි සිකුරාදා — 10.2.1961

12,286 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

மா. தே. கா : இல : ஸீ. 134/48.

**1946 ம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையும், 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளையும்**

பாதுறுதுகமா சலபயாம மாத்தளை அங்கத்தவரின் இடம் வெறுமையானதாகிவிட்டதெனப் பிரதிநிதிகள் சபையின் இலிகிதர் 1961 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 24 ம் தேதி எழுதிய கடிதத்தின் மூலம், 1946 ம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 24 (2) ம் பிரிவின் பிரகாரம் எனக்கு அறிவித்திருக்கின்றபடியால்,

மகா தேசாதிபதியாகிய, ஒலிவர் ஏணஸ்ற் குணதிலக ஆகிய நான், முன்னே கூறப்பட்டுள்ள சட்டப்பிரிவின்படியும் 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) அர்சப் பேரவைக் கட்டளையின் 27 ம் பிரிவின் படியும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி, இவ்வறிவித்தலின் மூலம்—

(1) முன்னே கூறப்பட்டுள்ள வெறுமையான இடத்தை நிரப்புதற்கு ஒரு தேர்தலை நடாத்தும்படி கட்டளையிடுகிறேன், அத்துடன்

(2) அத்தகைய தேர்தலுக்கு அபேட்சகர்களை நியமனஞ் செய்வதற்கான தேதி 1961 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 1ம் தேதியெனவும், அதற்கான இடம் மாத்தளை கச்சேரி எனவும் குறிப்பிடுகின்றேன்.

கொழும்பு,
1961 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் தேதி.

ஓ. ஈ. குணதிலக,
மகா தேசாதிபதி.